1995 ஏப்ரல் 10]

முட்டையை விரும்பாத குழந்தைகள் உண்ணுவதில்லை. சைவ உணவை சாப்பிடுகிற குழந்தைகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *293*, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

293—

நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

35381*—திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெசவாளர்களுக்கான சலுகைகள் முறையாகக் கிடைக்க அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு சலுகைகள் முறையாகக் கிடைக்க அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா? தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் நெசவாளர்களுக்குள்ள பல சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடம் வேலை செய்யும் ஏழை நெசவாளர்களுக்கு இந்த அடையாள அட்டை இருந்தால், எல்லா நெசவாளர்களும் சலுகைகளை அனுபவிப்பார்கள். மீனவர்களுக்கு எப்படி போட்டோ ஒட்டிய அடையாள அட்டையைக் கொடுத்திருக்கிறார்களோ, அதைப்போல, இந்த ஏழை நெசவாளர்களுக்கும் போட்டோ ஒட்டி, அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-45*

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சலுகைகளை நெசவாளர்களுக்கு அளிக்கக் கூடிய வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் கீழே வேலை பார்க்கக் கூடியவர்களாக இருந்தாலும்கூட, நிரம்ப

பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு அரசு அனுமதி அளிக்கும். அப்படி உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட அனைத்து நெசவாளர்களுக்கும் பாஸ் புத்தகங்கள் கச்சாத்து என்கின்ற பெயரில் இப்படிப்பட்ட பாஸ் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் பாஸ் புத்தகங்களை அவர்கள் காட்டினாலே நெசவாளர்களுக்குரிய அனைத்து சலுகைகளும் கிடைக்கும் என்கின்ற காரணத்தினால் புதிய அடையாள அட்டைகள் வழங்க வேண்டிய அவசியமில்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய உறுப்பினர்களின் சலுகைகளை அனுபவிப்பது மட்டுமல்லாமல், இதுபோன்று அவர்களிடம் கீழே வேலை செய்கின்ற ஏழை நெசவாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்குக் கூட இடங்களை, வீடுகளை ஒதுக்கித் தருவது கிடையாது. எங்களது தங்கத் தலைவி, புரட்சித் தலைவியினுடைய பெயரால் எங்களது தொகுதியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கவேண்டுமென்று தகுந்த ஆதாரத்தோடு மனு செய்திருக்கிறோம். அதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எங்களுடைய பகுதியில் அதைக் கொடுக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் எவ்வளவு நெசவாளர்கள் சேர்ந்து கொண்டாலும் அவற்றில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு அனைத்து வசதிகளும் புரட்சித் தலைவியினுடைய அரசு செய்து கொடுக்கிறது. அந்தவகையிலே இதுவும் தகுதியோடு இருந்தால் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கென்று நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இன்சூரன்ஸ், பி.எப். பிடிக்கப்படுமா? பிடிக்கிறார்களா? இல்லையென்றால், அரசு அந்த ஏழை நெசவாளர்களிடமிருந்து ஈ.எஸ்.ஐ., பி.எப். போன்ற தொகைகளைப் பிடித்து, அவர்களுக்கு வயதான காலத்தில் திரும்பக் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப ஓய்வூதியத் திட்டம் மற்ற திட்டங்களுக்கு

1995 ஏப்ரல் 10]

எல்லாம் ஆங்காங்கே தனி அலுவலர்கள் அதற்கென்று போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த சங்கங்களின் லாப நஷ்டங்களின் விதிகளுக்கேற்ப அதையெல்லாம் பிடித்தம் செய்து, அவர்களுக்கு அந்தந்த நேரங்களில் உதவிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுடைய சலுகைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் வழங்கப்படுகின்றன. அநேக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. இவைகள் எல்லாம் லாப நோக்கோடு இயங்குகின்ற வகையில், இதனுடைய சலுகைகள் நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் 'செக்கிங் இன்ஸ்பெக்டர்கள்' போட்டு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தையும் சரியாகச் செயல்படுவதற்கு உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: இந்த நஷ்டங்கள் எல்லாம் இப்போது ஏற்பட்டவையல்ல. நம்முடைய அரசு வந்தபிறகு ஏற்பட்டவை அல்ல. இதெல்லாம் பல ஆண்டுக்காலமாக நஷ்டத்திலே இயங்குகின்றன. ஏறக்குறைய 1475 சங்கங்களில் 764 சங்கங்கள் பல ஆண்டுகாலமாக நஷ்டத்தில் தொடர்ந்து இயங்கி வந்ததை மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது தனி அலுவலரை நியமித்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி ஒரு மாதகாலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்ல அரசில் நெசவாளர்களுக்கு எந்த அரசும் செய்யாத பல சலுகைகளை நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்து வருகிறார்கள். நாங்கள் நெசவாளர்கள் என்று *உண்மைக்குப் புறம்பாகச் சொல்லிக் கொண்டு . . . (குறுக்கீடு).

---

*மாண்புமிகு பேரவைத் தலைவ[illegible] ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்மைக்குப் புறம்பாக என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: உண்மைக்குப் புறம்பாகச் சொல்லிக்கொண்டு, நெசவாளர்களுக்குச் சேரவேண்டிய அத்தனை சலுகைகளையும், மற்றவர்கள் அடைந்துவிடுகிறார்கள். இதனால் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நெசவாளர்களுக்குச் சேர வேண்டிய சிட்டா நூல், மற்ற நூல் வகைகள், சலுகைகள் நெசவாளர்களுக்குச் சேர்வதில்லை. இதனால் நெசவாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சாத்து என்கிற அந்த பாஸ் புத்தகம் இருந்தால் தான், சிட்டா நூல் முதற்கொண்டு எல்லா சலுகைகளையும் நெசவாளர்கள் அடைய முடியும். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அப்படி தவறான சலுகைகளை யாரும் பெற்று விடுவது இல்லை. தவறான முறையில் பெற்று விடுவதற்கு இந்த அரசு விடுவது இல்லை. அதை நல்ல முறையில் கண்காணித்து வருகிறது. இந்த பாஸ் புத்தகம் முழுக்க முழுக்க நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. வேறு யாருக்கும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவது இல்லை. ஆகவே இந்த பாஸ் புத்தகம் இருந்தால்தான் அவர்கள் எல்லாவற்றையும் பெற முடியும். நெசவாளர்களுக்கான சலுகைகளாக இருந்தாலும், சிட்டா நூலாக இருந்தாலும், வீடு கட்டும் திட்டமாக இருந்தாலும், ஒய்வூதியமாக இருந்தாலும், இந்த பாஸ் புத்தகம் இல்லை என்றால் பெற முடியாது. ஆகவே அதிலே முறைகேடு நடப்பதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 294, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.